இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02-06-2025

# எளிமை ஆளுமை!

எளிமையே அழகு என்பார்கள். எளிமையே ஆளுமை என்பதைத் தொடர்ந்து மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**மக்களுக்காக உழைத்து - மக்களுடனே வாழ்ந்து - மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு - மக்களாட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் கோரிக்கையையும் கேட்டுக் கேட்டு நிறைவேற்றித் தரும் மக்கள் முதலமைச்சராகச் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை தினமும் உயர்த்திக் கொண்டே செல்கிறது.**

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களின் கோரிக்கைகளை தி.மு.க. தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திரட்டினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் உங்களது கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து சாத்தியமான அனைத்து திட்டத்தையும் உருவாக்கித் தருவேன்' என்று வாக்குறுதி தந்தார்கள்.

"இந்த இடத்துக்கு வந்த உடனே அனைவரும் தங்கள் குறைகளை முன்பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்திருந்தேன். அந்த முறைப்படி உங்கள் குறைகளை எழுதிக் கொடுத்திடீங்களா? அதுக்கு .... இந்த மாதிரி ஒரு ரசீது கொடுத்தாங்களா? அந்த ரசீதை வாங்கிட்டீங்களா? காட்டுங்க! அப்படி யாராவது ரசீது வாங்காம இருந்தீங்கன்னா... இந்தக் கூட்டம் முடிந்ததும் போய் ரசீதை மறக்காம வாங்கிக் கோங்க! அது சாதாரண ரசீது மட்டுமல்ல. அதை வைத்து நீங்கள் என்னைக் கேள்வி கேட்கலாம். அதற்காக உரிமை சீட்டு அது" என்று அக்கூட்டத்தில் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

**"100 நாளில் உங்கள் குறைகளைத் தீர்ப்பேன். இல்லாவிட்டால் என்னைக் கேள்வி கேட்கலாம்" என்ற உரிமையை மக்களிடம் கொடுத்திருக்கிறார் தலைவர்.**

"கண்களில் கனவுகளோடும் கையில் மனுக்களோடும் இதயத்தில் ஏக்கத்துடனும் - இந்த அரங்கத்தை நோக்கி வந்திருக்கும் உங்களது நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு என்னால் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நீங்கள் வந்திருக்கிறீர்கள். நான் ஆட்சி அமைத்தால் 100 நாளில் உங்கள் பிரச்சினையைத் தீர்ப்பேன்" என்று அப்போது வாக்குறுதி அளித்தார்.

**மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கி அவை அனைத்தையும் வேண்டுகோள்களை நிறைவேற்றியும் வைத்த சாதனை முதலமைச்சர் தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

அடுத்தடுத்து வரும் மனுக்களை பரிசீலித்து தீர்வு காண, 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். முதல்வரின் முகவரித் துறை என்ற துறையின் கீழ் கடந்த மூன்றாண்டு காலத்தில் 68 லட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்கள் பெறப்பட்டன. அதில் 66 லட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு காணப் பட்டுள்ளது. மக்களாட்சியின் மாபெரும் சாதனை இது.

இதைத் தொடர்ந்து மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பொதுமக்கள் அதிகமாகத் தொடர்பு கொள்ளும் 13 அரசுத் துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மட்டும் முகாம்கள் மூலமாகப் பெற்று அந்த கோரிக்கைகள் 30 நாட்களுக்குள் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். முதலில் நகராட்சிப் பகுதியில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன. அடுத்து ஊராட்சிப் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கோரிக்கை மனுக்களை அரசாங்கமே மக்களது இருப்பிடத்துக்குச் சென்றுவாங்கவேண்டும்என்றுமுதலமைச்சர்அவர்கள்நினைத்தார்கள். அதற்காக உருவாக்கப்பட்டது தான், 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டமாகும். இதோ இப்போது 'எளிமை ஆளுமை' என்ற திட்டத்தை கடந்த 29 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

**தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சுகாதார சான்றிதழ், பொது கட்டிட உரிமம், முதியோர் இல்லங்கள் உரிமம், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம், மகளிர் இல்லங்கள் உரிமம், சொத்து மதிப்பு சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல், புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்கு பயன்படுத்த தடையின்மை சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ், அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மை சான்றிதழ் ஆகிய பத்து சேவைகளின் நடைமுறைகளை எளிமையாக்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அனைத்தும் இணைய வழியில் எளிதில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

இதன் மூலம் அரசு நிர்வாக நடைமுறை எளிமையாக்கப் பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு சேவைகளை எளிதில் பெறலாம். நேரில் வரத் தேவையில்லை. காத்திருக்கத் தேவையில்லை, அலையத் தேவை இல்லை என்பது இத்திட்டத்தின் சிறப்பாகும்.

**முதலமைச்சர் செல்லும் இடமெல்லாம் மக்கள் மனுக்களைத் தருகிறார்கள் என்றால் அதில் இருந்து ஒரு நம்பிக்கை தெரிகிறது. 'முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தால் நிறைவேறும்' என்பதுதான் அந்த நம்பிக்கை. அத்தகைய மாபெரும் நம்பிக்கையை மக்களிடம் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

உண்மையான மக்களாட்சி என்பது இப்படித்தான் நடக்கும். அதனைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தீவிரவாதத்துக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துக்கூற

# கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழு ஸ்பெயின் சென்றது!

## ஸ்பெயின் நாட்டு அதிகாரிகளைச் சந்திக்கின்றனர்



மேட்ரீட், ஜீன் 2 -

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பி.க்கள் குழுவினர் ஸ்பெயின் சென்றடைந்தனர்.

தீவிரவாதத்துக்கு எதிராக இந்திய அரசு மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் உலக நாடுகளுக்கு ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட எம்.பி.,க்கள் குழு நேரில் சென்று விவரித்து வருகிறது. அந்தவகையில், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., தலைமையிலான குழு, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்லோவேனியா,

கிரீஸ், லாட்வியா ஆகிய நாடுகளுக்கு சென்று விளக்கம் அளித்தது. இதனையடுத்து கனிமொழி கருணாநிதி தலைமையிலான குழு தனது பயணத்தின் அடுத்த கட்டமாக ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட் சென்றடைந்தது. ஸ்பெயினுக்கான இந்திய தூதர் தினேஷ் கே பட்நாயக் இக்குழுவை வரவேற்றார். ஸ்பெயின் அரசு உயர் மட்ட அதிகாரிகளை சந்திக்கும் இக்குழுவினர், இந்திய வம்சாவளியினரை சந்தித்து உரையாடவும் திட்டமிட்டுள்ளனர்.

வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

# சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் நடைபெறும் பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்து விரைந்து முடிக்க அறிவுரை!

சென்னை, ஜுன் 2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (31.5.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய குடியிருப்புகள், புதிய சமூக நலக்கூடம் மற்றும் விளை யாட்டுத் திடல் மேம்படுத்துதல், ஸ்டான்லி அரசு மருத்துவ மனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசு வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து கடந்த 2024 ஆம் ஆண்டு 1000 கோடி என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் என்று 6000 கோடியை தாண்டி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனுதினமும் இந்த திட்டப்பணிகள் குறித்த முன்னேற்றத்தை தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து திட்ட பணிகளை காணொளி வாயிலாகவும், அரங்க கூட்டங்கள் வாயிலாகவும் களஆய்வும் மேற்கொண்டு எங்களைப் போன்ற ஒருவர்களிடம் கைபேசியிலும் தொடர்பு கொண்டு திட்டப்பணிகள் நிலை குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றார்கள்.

அந்த வகையில் நாம் இங்கு நின்று கொண்டிருக்கின்ற பகுதியில் கடந்த 2024 நவம்பர் மாதம் 4ஆம் தேதி வால்டாக்ஸ் சாலையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்தார்கள். வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் இந்த பகுதியில் மட்டும் 700 குடியிருப்புகள் ரூபாய் 122 கோடி செலவில் கட்டப்பட அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த பணியின் வேகத்தை பார்த்தால் ஐந்து மாதங்களில் சுமார் ஐந்து அடுக்குகள் இன்றைக்கு காங்கிரிட் ஸ்லாப் போடப்பட்டு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இதே இடத்தில் ஒரே டயாலிசிஸ் சென்டர் வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் தங்களுடைய உடல் நலத்தை பேணிக்காக்கவும் கட்டணம் இல்லாமல் ஒரு சில டயாலிசிஸ் சென்டர். இதே இடத்தில் அதிக அளவு வாடகை கொடுத்து திருமணங்கள் நடத்துவதற்கு சிரமமான சூழ்நிலை இருப்பதை உணர்ந்து இந்த இடத்தில் சமுதாய நலக்கூடம் என்று சொல்லப்படுகின்ற குறைந்த அளவு வாடகை ஒரு திருமணம் மண்டபம் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதோடு இன்றைய காலகட்டத்தில் உடற்பயிற்சி என்ற விழிப்புணர்வு அனைவரிடத்திலும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த பகுதிக்கு தேவையான அளவு ஒரு நல்ல விளையாட்டு அரங்கமும் அதே நேரத்தில் அவர்களுடைய பொழுதுபோக்கு பூங்காவும் அமைப்பதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து பணிகளையும் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று தொடர் ஆய்விலே ஈடுபட்டு இருக்கிறோம். எங்கள் துறையினுடைய முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், இந்த வடசென்னை னுடைய மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, துறையின் பல்வேறு வகையில் இருக்கின்ற பொறியாளர்கள், மாநகராட்சி மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, இந்த ஆய்வில் ஈடுபட்டு இருக்கின்றோம்.

தொடர்ந்து ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் 776 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் ஏற்படுத்தப்பட்டு அந்த பணிகளும் தற்பொழுது ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம். திட்டங்களை அறிவித்துவிட்டு அந்த திட்டங்களுக்கு தொடக்க விழாவை நடத்திவிட்டு அமருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இல்லாமல் தொடர்ந்து அந்த திட்ட ப்பணிகளை நேர்த்தியோடும் குறிப்பிட்ட கால அளவுகள் கால அளவுக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற தொலைநோக்கு பார்வையோடு திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த திட்டப் பணிகள் அனைத்தும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 7075 சதவீதம் அளவிற்கு 2026 ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்வதற்கான முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எங்கள் துறையின் உடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் டாக்டர் சு.பிரபாகர், சென்னை பெருநகரத்தின் உடைய மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், அதே போல் சென்னை பெருநகரத்தின் உடைய குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் வினய், ஒருங்கிணைந்த திட்ட பணிகளுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்த திட்டப் பணிகள் விரைவு ப்படுத்தப்படும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு

# உடற்கல்வி - தையல் - இசை ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, ஜுன் 2 -

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களால் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உடற்கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர்களுக்கு மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு உடற்கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 45 நபர்களுக்கு (33 உடற்கல்வி ஆசிரியர், 10 தையல் ஆசிரியர் மற்றும் 2 இசை ஆசிரியர்) பணி நியமன கலந்தாய்வு சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் நடத்தப்பட்டது.

அக்கலந்தாய்வில் தங்களுக்கு விருப்பமான பணியிடங்களைத் தேர்வு செய்த 45 உடற்கல்வி, சிறப்பாசிரியர்களுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 7 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (01.06.2025) மதுரை, கலைஞர் நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பள்ளிக்கல்வி இணை. இயக்குநர் (பணியாளர் தொகுதி) முனைவர் த. இராஜேந்திரன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உடற்கல்வி, தையல் மற்றும் இசை ஆசிரியர்களுக்கு மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.